# ஜிஎஸ்டி வசூலில் தமிழ்நாடு, புதுச்சேரி மண்டலத்துக்கு மூன்றாம் இடம்

**சென்னை, ஜூலை 3:** ஜிஎஸ்டி வருவாய் வசூலில் கடந்த 2022-23-ஆம் நிதி ஆண்டில் தேசிய அளவில் தமிழகம், புதுச்சேரி மண்டலம் 3- ஆம் இடத்தை பிடித்துள்ளது.

இதுகுறித்து ஜிஎஸ்டி ஆணையர் கே.பாலகிஷன் ராஜு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகம், புதுச்சேரி ஜிஎஸ்டி மண்டலத்தில் ஜிஎஸ்டி வரி செலுத்துவோர் 4.57 லட்சம் பேர் உள்ளனர். இந்த மண்டலம் கடந்த 2022-23-ஆம் நிதி ஆண்டில் அகில இந்திய ஜிஎஸ்டி வருவாயில் 8.12 சதவீதமும், அகில இந்திய கலால் வருவாயில் 4.72 சதவீதமும் பங்களிப்பை வழங்கியுள்ளது.

நாட்டின் மொத்த ஜிஎஸ்டி வருவாய் வசூல் முந்தைய ஆண்டைவிட 2022-23-ஆம் ஆண்டில் 21 சதவீதம் அதிகரித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி மண்டலத்தில் இந்த வருவாய் 19 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன்மூலம், கர்நாடகம், மகாராஷ்டிரத்துக்கு அடுத்தபடியாக தமிழகம், புதுச்சேரி மண்டலம் தேசிய அளவில் 3-ஆம் இடத்தை பிடித்துள்ளது.

ஜிஎஸ்டி திருப்பி செலுத்திய (ரீஃபண்ட்) தொகையாக 2022-23-ஆம் ஆண்டில் ரூ.5,771 கோடி வழங்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 27 சதவீதம் அதிகம்.

**3 ஆயிரம் போலி பதிவுகள்:** மேலும் போலி ஜிஎஸ்டி பதிவுகளை கண்டுபிடிக்க, கடந்த மே மாதம் சிறப்பு திட்டம் தொடங்கப்பட்டது. இதன்மூலம், 3 ஆயிரம் போலி ஜிஎஸ்டி பதிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார் அவர்.

# டாக்டர் பத்மா சுப்பிரமணியத்துக்கு 'முரளி நாத லஹரி' விருது

**சென்னை, ஜூலை 3:** டாக்டர் எம்.பாலமுரளிகிருஷ்ணாவின் 93-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, டாக்டர் எம்.பாலமுரளிகிருஷ்ணா நினைவு அறக்கட்டளை மற்றும் பாரதிய வித்யா பவன் சார்பில் சிறந்த கலைஞருக்கான தேசிய விருது ஜூலை 6-ஆம் தேதி வழங்கப்படவுள்ளது.



2023-ஆம் ஆண்டுக்கான முரளி நாத லஹரி விருது மற்றும் ரூ.1 லட்சம் ரொக்கம் பரத நாட்டியக் கலைஞர் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்துக்கு வழங்கப்படவுள்ளது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள பாரதிய வித்யா பவன் பிரதான அரங்கில் ஜூலை 6-இல் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைஞர்கள் கே.கிருஷ்ண குமார், பின்னி கிருஷ்ணகுமார் ஆகியோரின் இசை அஞ்சலி நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் பங்கேற்று விருது, ரொக்கத்தை வழங்கவுள்ளார். மேலும், சென்னை பாரதிய வித்யா பவனின் தலைவர் ச.ரவி, மூத்த இசைக் கலைஞர் டி.வி.கோபாலகிருஷ்ணன், சென்னை பாரதிய வித்யா பவன் இயக்குநர் கே.என்.ராமசாமி உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

# சென்னை நியாயவிலைக் கடைகளில் தக்காளி விற்பனை

## கிலோ ரூ.60-க்கு கிடைக்கும்: அமைச்சர் பெரியகருப்பன்

**சென்னை, ஜூலை 3:** தக்காளி விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, சென்னையில் முதல் கட்டமாக 82 நியாயவிலைக் கடைகளில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 4) முதல் தக்காளி விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்தக் கடைகளில் கிலோ ரூ.60 விலையில் தக்காளி வாங்கலாம் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார். அதேவேளையில், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளிலும் தக்காளி தொடர்ந்து விற்பனை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் ஒரு கிலோ தக்காளி 100 ரூபாய்க்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெளிச் சந்தையில் விலையைக் கட்டுப்படுத்த, மாநிலம் முழுவதும் உள்ள பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தக்காளி விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், நியாயவிலைக் கடைகளில் தக்காளி விற்பனை செய்வது குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனையில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்.சுப்பையன், கூடுதல் பதிவாளர் விஜயராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியது: அண்டை மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு தக்காளி வரத்து குறைவாக உள்ளதால், வெளிச் சந்தைகளில் அதன் விலை உயர்ந்துள்ளது. கூட்டுறவு, தோட்டக் கலைத் துறைகள் இணைந்து, அண்டை மாநிலங்களில் தக்காளி பயிர் செய்யப்பட்டுள்ள இடங்களைக் கண்டறிந்துள்ளன. அங்கேயிருந்து தக்காளியை கொள்முதல் செய்வதன் மூலம் விலையேற்றத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விலை உயர்வால் ஏழை மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, நியாயவிலைக் கடைகளில் தக்காளியை விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

**82 கடைகள்:** சென்னையில் முதல் கட்டமாக, வட சென்னையில் 32 நியாயவிலைக் கடைகள், மத்திய, தென் சென்னையில் தலா 25 நியாயவிலைக் கடைகள் என மொத்தம் 82 கடைகளில் செவ்வாய்க்கிழமை முதல் தக்காளி கிலோ ரூ.60- விலையில் விற்பனை செய்யப்படும். தேவைக்கேற்ப, தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் நியாயவிலைக் கடைகள் மூலம் தக்காளி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். குறுகிய காலத்துக்குள் தக்காளி விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு முழு முயற்சி மேற்கொண்டு வருகிறது என்றார் அவர்.



தக்காளி விலை உயர்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தலைமைச் செயலகத்தில் கூட்டுறவு, தோட்டக்கலைத் துறை அலுவலர்களுடன் திங்கள்கிழமை ஆலோசனை நடத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன். உடன் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன், கூடுதல் பதிவாளர் விஜயராணி உள்ளிட்டோர்.

### சாகுபடி பரப்பை அதிகரிக்க நடவடிக்கை

தக்காளி பயிரிடும் பரப்பை அதிகரிப்பது தொடர்பாக, தலைமைச் செயலகத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தப்பட்டது.

இதில், தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் விலை உயர்வு குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

தமிழகம் முழுவதும் உள்ள உழவர் சந்தைகளில் 1,592 மெட்ரிக் டன் தக்காளி விற்பனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், தக்காளி பயிரிடும் பரப்பை அதிகப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. வருங்காலங்களில் தக்காளி மற்றும் இதர காய்கறிகளின் விலையேற்றம் கோடை காலத்திலும் நிகழாத வகையில் முன்கூட்டியே தொடர் நடவடிக்கை எடுக்க கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சான்று தேவையில்லை

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் பணம் கொடுத்து வாங்குவது போன்று, நியாயவிலைக் கடைகளிலும் தக்காளியை பொது மக்கள் வாங்கலாம் என கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நியாயவிலைக் கடைகளில் தக்காளியைப் பெற எந்தக் கட்டுப்பாடும் இல்லை. பொதுமக்கள் அருகில் உள்ள தக்காளி விற்பனை செய்யப்படும் எந்த நியாயவிலைக் கடைக்கும் சென்று அதைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், அதற்கு சான்றாக குடும்ப அட்டையைக் காண்பிக்கத் தேவையில்லை எனவும் அவர்கள் கூறினர்.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க முடியாத காரணத்தால், நியாயவிலைக் கடைகள் மூலம் தக்காளி விற்பனை செய்யப்படுவதாக கூட்டுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பூமியை உயிர்ப்போடு வைப்போம்

**முனைவர் என். மாதவன்**

ஒருநாள் கிராமம் ஒன்றின் வழியாகப் பயணித்தேன். சிறப்பு நிகழ்வு ஒன்று நடைபெறும் வீட்டில் நாற்காலி, மேஜை போட்டு உணவு பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தது. பக்கத்துத் தெருவிலிருந்து பெண்மணி ஒருவர் கையில் பிளாஸ்டிக் வாழையிலையை எடுத்துக்கொண்டு அந்த வீட்டிற்குள் உணவருந்த நுழைந்தார்.

அந்த தெருவிலேயே பல வாழைமரங்கள் இருந்தன. எனவே, அந்தப் பெண்மணி செய்த செயலை என்னால் ஏற்க முடியவில்லை. ஒருவேளை அந்த வீட்டில் உணவருந்திய அனைவரும் இப்படித்தான் பிளாஸ்டிக் வாழையிலையில் உணவருந்தினார்களோ என்ற எண்ணம் வந்தது.

நகரங்களுக்கு நிகராக கேளிக்கைகள், விருந்து நிகழ்வுகள் கிராமப்புறங்களிலும் நடைபெறத்தொடங்கியுள்ளன. இவற்றை, கிராமப்புறங்களின் இயல்பை முற்றிலும் மரத்துப் போகச் செய்யும் நுகர்வு கலாசாரத்தின் நீட்சியாகத்தான் பார்க்க முடிகிறது.

இந்த ஒரு நிகழ்வு மட்டுமில்லை. மனிதர்கள் உணவு உண்பதற்கும் பாலிதின் பயன்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவே செய்கிறது. எத்தனை கட்டுப்பாடுகள் விதித்தாலும் அவை அத்தனையையும் மீறி உணவகங்களில் பாலிதின் பயன்பாடு நீடிக்கவே செய்கிறது. அவ்வாறு பாலிதினில் பேக் செய்து கொடுக்கும் உணவுகளை வாங்கிக்கொண்டு சுற்றுலா செல்வோரும் உள்ளனர்.

அவர்கள் நெடுஞ்சாலையோரங்களில் மரங்களில் நிழலில் உணவருந்துவர். அவர்களில் பலரும் உணவருந்திய இடங்களில் பொறுப்பற்ற முறையில் பாலிதின், பிளாஸ்டிக் டப்பாக்களை வீசிவிட்டுச் செல்வது வாடிக்கையாகிவருகிறது.

டாஸ்மாக் கடைகளை ஒட்டிய இடங்களிலோ கேட்கவே வேண்டாம். ஏராளமான பாலிதின் தம்ளர்களும், பாலிதின் பைகளும் மண்ணில் வீசப்படுகின்றன. ஒன்று மட்டும் உண்மை. பாலிதின் தயாரிப்பை அறவே நிறுத்தாமல் இவ்வாறு வீசப்படுவதை தவிர்க்கவே இயலாது.

குழந்தைகள் சாப்பிடும் பிஸ்கட், சாக்லேட், பீட்சா, பர்கர் போன்ற உணவுப் பொருட்களின் பேக்கிங்கிற்காக பயன்படுத்தப்படும் பாலிதின், காகிதம், அட்டை போன்ற பொருட்களைப் பார்க்கும்போது சூழல் அக்கறை உள்ள யாராலும் வருத்தப்படாமல் இருக்க இயலாது.

வாழ்க்கை ஓட்டத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மணித்துளியும் முக்கியத்துவம் வாய்ந்ததே. பலரும் உணவாக இருந்தாலும் உடையாக இருந்தாலும் விரைவாகவும் உடனடித் தயாரிப்போடும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர்ப்பார்ப்பை நிறைவு செய்ய நினைக்கும் வணிக நிறுவனங்கள் இதுபோன்ற வழிவகைகளை மேற்கொள்கின்றன.

போட்டி காரணமாக நிறுவனங்கள் இவ்வாறு பேக்கிங்கில் கவர்ச்சியைக் கூட்ட முயல்கின்றன. விரைவாக விற்பனை செய்து லாபமீட்டும் வாய்ப்பை எவ்வாறு வணிக நிறுவனங்கள் விட்டுக்கொடுக்க இயலும் என்று தோன்றும். ஆனால் இந்தியா போன்ற மக்கள்தொகை மிகுந்த நாடுகளில் பாலிதீன், காகிதம், அட்டை போன்றவற்றின் பயன்பாடு இயற்கை வளங்களின் இருப்பை நிர்ணயிப்பதாக உள்ளது.

பாலிதின் பொருட்களை உபயோகித்துவிட்டு வீசி எறிவதால், அவை பலநூறு ஆண்டுகள் மக்காமல் இருந்து மண்ணை மாசுபடுத்துகின்றன. அது மட்டுமல்ல, நிலத்தடி நீர் சேகரிப்புக்கும் தடையாக இருக்கின்றன. வசதி படைத்தவர்கள் பயன்படுத்தி வீசி எறியும் பாலிதினால் ஏற்படும் சுகாதாரக் கேட்டால் பாதிக்கப்படுவோர் ஏழை எளிய மக்களாகவே இருப்பர்.

எந்த ஒரு செயல்பாட்டிலும் துணைவினையாக கழிவு உருவாவது தவிர்க்க இயலாததே. சமையல் செய்ய காய்கறிகளை நறுக்குகிறோம். அதன் தோல் போன்ற கழிவுகளை வெளியேற்றித்தானே ஆகவேண்டும். இதுபோலவே பழங்களின் தோலும் கழிவாக வெளியேற்றப்பட வேண்டியதே.

இதனை மனதில் கொண்டே, மக்கும் பொருட்கள், மக்காப் பொருட்கள் என குப்பைகளைத் தனித்தனியே பிரித்து மேலாண்மை செய்யும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

ஆனால் கழிவு மேலாண்மை என்று அறிவித்துவிட்டு, கட்டுக்கடங்காமல் கழிவு உருவாக்கத்தை அனுமதிப்பது நியாயமான செயலாக இருக்காது. கழிவு மேலாண்மையுடன், கழிவு உற்பத்தியைக் குறைக்கவும் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

முதற்கட்டமாக பாலிதின் பயன்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஆயத்த ஆடை விற்பனை செய்யும் நிறுவனங்கள் ஆடைகளோடு வரும் பேக்கிங் பொருட்களை வாடிக்கையாளர்களிடம் திரும்பப் பெற்று அவற்றை மறுபயன்பாட்டிற்கு உட்படுத்தலாம்.

அவ்வாறு பேக்கிங் பொருட்களை திரும்ப அளிப்போருக்கு அடுத்தடுத்த விற்பனைகளில் தள்ளுபடி அளித்து ஊக்குவிக்கலாம்.

உணவகங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கூடுதலாகப் பெற்றுக்கொண்டு எளிதில் மக்கும் பொருட்களான தொன்னை, இலை போன்றவற்றில் மட்டுமே பேக் செய்து கொடுக்க வேண்டுமென அரசாணை வெளியிடலாம். பிஸ்கட், சாக்லேட் போன்றவற்றைத் தயாரிக்கும் பெருநிறுவனங்கள் பல்வேறு இடங்களிலும் கிளைகளை நிறுவி அக்கிளைகளில் குறைந்தபட்ச பேக்கிங் பொருட்களோடு விற்பனை செய்யலாம்.

ஒவ்வொரு வீட்டிலுள்ளோரிடமும் அவர்கள் அகற்றும் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். காய்கறி, மளிகை போன்ற பொருட்களை துணிப்பையை எடுத்துச் சென்று வாங்கிவரலாம். துணிப்பை உபயோகிக்கும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைக் கண்டறிந்து பள்ளிகளின் மாணவர் பேரவை கூட்டங்களிலோ நகர்வாழ் மக்கள் சங்கங்களிலோ அவர்களைப் பாராட்டலாம்.

மனிதர்களின் செயல்பாட்டால் பூமி வாழ அருகதையற்ற இடமாகிக்கொண்டு வருகிறது. மக்கள் எழுத்தறிவு விகிதம் குறைவாக இருந்த நாட்களிலேயே சுற்றுச்சூழல் குறித்த அக்கறையோடு வாழ்ந்த பெருமைக்குரியது சமூகம் நமது சமூகம். இன்றைய எழுத்தறிவு விகித அதிகரிப்பும் நாகரிக வேட்கையும் பூமியை உயிர்க்கோளமாகத் தொடர வழிவகை காணவேண்டும். பூமி உயிர்ப்போடிருக்கும் வரைதான் உயிரினங்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் உண்டு.

# பள்ளம் தோண்டியபோது சுவாமி சிலைகள் கண்டெடுப்பு

**நன்னிலம், ஜூலை 3:** திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அருகே குடிநீர் குழாய் உடைப்பை சரி செய்ய பள்ளம் தோண்டியபோது சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

கொல்லுமாங்குடி மாங்குடித் தோப்புத் தெருவில் வசிப்பவர் செல்வராஜ் (62). இவரது வீட்டு குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டிருந்தது. இதை சரி செய்வதற்காக ஞாயிற்றுக்கிழமை மாலை பள்ளம் தோண்டினார். அப்போது, சுமார் 3 அடி ஆழத்தில் சிறிய உலோகப் பெட்டி புதைந்திருந்தது தெரியவந்தது. அதில், சுவாமி சிலைகள் இருந்தன.

இதுகுறித்து பேரளம் காவல்நிலையத்துக்கு செல்வராஜ் தகவல் தெரிவித்தார். அங்கு போலீஸாருடன் வந்த கிராம நிர்வாக அலுவலர், அந்த சிலைகளை உலோகப் பெட்டியுடன் பெற்று நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தார்.



பள்ளம் தோண்டியபோது கிடைத்த சிறிய சுவாமி சிலைகள், உலோகப் பெட்டி.

இதுகுறித்து நன்னிலம் வட்டாட்சியர் ஜெகதீசன் தெரிவித்ததாவது:

குடிநீர் குழாய் உடைப்பை சரி செய்ய பள்ளம் தோண்டிய இடம் அங்குள்ள ஸ்ரீமாகாளநாத சுவாமி கோயிலுக்கு சொந்தமானது. இங்கு கண்டெடுக்கப்பட்ட உலோகப் பெட்டியில், சிறிய அளவிலான ஒரு பெருமாள் சிலை, மகாலட்சுமி சிலை, 2 ஆண்டாள் சிலைகள், ஒரு கருடன் சிலை, மற்றொரு சிலை, 5 ருத்ராட்சங்கள், மூடியுடன் செம்பு போன்றவை இருந்தன.

இதுகுறித்து உயரதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறை நிபுணர்கள் இந்த சிலைகளை ஆய்வு செய்யும்போது அதன் மதிப்பு மற்றும் கால அளவு தெரியவரும் என்றார்.

# உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு: சென்னையில் ஜூலை 7-இல் தொடக்கம்

**சென்னை, ஜூலை 3:** உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (ஐஏடிஆர்), சென்னை ஆசியவியல் நிறுவனம் இணைந்து நடத்தும் 11-ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சென்னையில் ஜூலை 7, 8, 9 ஆகிய மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. மாநாட்டை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைக்கவுள்ளார்.

இது குறித்து உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தலைவர் பொன்னவைக்கோ, பொதுச் செயலாளர் பேராசிரியர் உலகநாயகி பழனி, ஆசியவியல் நிறுவனத்தின் இயக்குநர் ஜி.சாமுவேல், கவிஞர் விஜயகிருஷ்ணன் உள்ளிட்டோர் சென்னையில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழர்களின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும், சங்க இலக்கியங்களில் கண்டறியப்படும் புதிய தகவல்களை இன்றைய தலைமுறைக்கு தெரியப்படுத்த வேண்டும், மேலும் தமிழ்மொழி, இலக்கியம், தமிழர் பண்பாடு, கலாசாரம், நாகரிகம் ஆகியவை குறித்து இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட நோக்கங்களை கருத்தில் கொண்டும் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இது சென்னை செம்மஞ்சேரியில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் வரும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன.

மாநாட்டில் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இதற்காக அனுப்பப்பட்ட 1,057 கட்டுரைகளில், 350 கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதில் 200 கட்டுரைகள் அரங்கில் வாசிக்கப்படும்.

ஜூலை 7-இல் நடைபெறவுள்ள தொடக்க விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து, சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தமிழறிஞர்களுக்கு பல்வேறு விருதுகளை வழங்கவுள்ளார்.

இதில் மக்களவை உறுப்பினர்கள் தமிழச்சி தங்க பாண்டியன், சு.வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

மாநாட்டில் புத்தகக் கண்காட்சி, நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம்பெறுகின்றன. மாநாட்டின் நிறைவு நாளில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

இதில் பொதுமக்கள், தமிழ் ஆர்வலர்கள் திரளாக பங்கேற்க வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

# உச்சநீதிமன்றத்தில் இலவச வை-ஃபை வசதி அறிமுகம்

**புது தில்லி, ஜூலை 3:** உச்ச நீதிமன்ற வளாகம் மற்றும் 5 நீதிமன்ற அறைகளில் வைஃபை வசதியை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் திங்கள்கிழமை அறிமுகப்படுத்தினார்.

ஒன்றரை மாதக் கோடை விடுமுறைக்கு பிறகு திங்கள்கிழமை முதல் உச்ச நீதிமன்றம் வழக்கம் போல் இயங்க தொடங்கியது. இந்நிலையில், திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற வளாகம் மற்றும் நீதிமன்ற அறைகளில் வை-ஃபை வசதியை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், 'உச்ச நீதிமன்றத்தை எண்மயமாக்கும் செயல்முறையில் முக்கிய படியாக நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள பார் கவுன்சில், காத்திருக்கும் அறை, செய்தியாளர்கள் அறை மற்றும் தலைமை நீதிபதியின் நீதிமன்ற அறை உள்பட 5 நீதிமன்ற அறைகளில் வை-ஃபை வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.



வைஃபை வசதி, காணொலி விசாரணைக்கான தொலைக்காட்சித் திரைகள் பொருத்திய உச்ச நீதிமன்ற அறை.

உச்ச நீதிமன்றத்தில் இனி சட்டப்புத்தங்களுக்கும், காகிதங்களுக்கும் வேலை இருக்காது. வழக்குரைஞர்கள், செய்தியாளர்கள், பார்வையிடும் மக்கள் என அனைவரும் இந்த வை-ஃபை வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பயனர்கள் இச்சேவையின் பயன்பாட்டு குறித்து தங்களின் கருத்துகளை நிச்சயம் தெரிவிக்க வேண்டும்' என்றார்.

இச்சேவைக்கான பிரத்யேக வலைத்தளத்தில் பயனர்கள் தங்களின் கைப்பேசி எண்ணை உள்ளீட்டு குறுஞ்செய்தி மூலம் பெறப்படும் கடவுச்சொல்லைக் கொண்டு அனுமதிப் பெற்று வை-ஃபை வசதியைப் பயன்படுத்த தொடங்கலாம் என உச்ச நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், காணொலி காட்சி வாயிலாக நீதிபதிகள் வழக்கு விசாரணை மேற்கொள்ள வேண்டியதற்கான மேம்படுத்தப்பட்ட அமைப்பும் உச்ச நீதிமன்றத்தின் நீதிமன்ற அறைகளில் நிறுவப்பட்டுள்ளது.

அதிகபட்ச தொழில்நுட்ப பயன்பாடு மூலமாக உச்ச நீதிமன்ற வளாகத்தில் பசுமைத் திட்டங்களை அமல்படுத்தும் நோக்குடன் காணொலி வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

# இன்று எஸ்சிஓ மாநாடு: காணொலி வழியில் தலைமையேற்று நடத்தும் பிரதமர் மோடி

**புது தில்லி, ஜூலை 3:** ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாடு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காணொலி வழியில் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப் மற்றும் பிறர் பங்கேற்கும் இந்த மாநாட்டில் பிராந்திய பாதுகாப்பு நிலவரம், வர்த்தகம் மற்றும் நாடுகளிடையேயான போக்குவரத்து தொடர்பை மேலும் வலுப்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்தியா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், இந்த அமைப்பில் புதிய நிரந்தர உறுப்பினராகியுள்ள ஈரானுக்கு வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

ஆப்கானிஸ்தான் நிலவரம், உக்ரைன் மீதான போர் விவகாரம், எஸ்சிஓ அமைப்பின் உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது உள்ளிட்ட விஷயங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காணொலி வழியில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கேற்க ஐ.நா. சபை, தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ஆசியான்), காமன்வெல்த் நாடுகள் அமைப்பு (சிஐஎஸ்), கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு (சிஎஸ்டிஓ), யுரேசிய பொருளாதார ஒன்றியம் (இஏஇயு), ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பிக்கையை ஊக்குவிக்கும் நவடிக்கைகளான மாநாட்டு அமைப்பு (சிஐசிஏ) ஆகிய 6 சர்வதேச, பிராந்திய அமைப்புகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ரஷியா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாடுகளின் அதிபர்களால் கடந்த 2001-ஆம் ஆண்டு சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற மாநாட்டில் உருவாக்கப்பட்டது.

இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்த 2017-இல் நிரந்தர உறுப்பு நாடுகளாகின. தற்போது சுழற்சி முறையில் இந்த அமைப்புக்கு நிகழாண்டில் இந்தியா தலைமை வகித்து வருகிறது.

# இந்தியா மாற்றமடைவது பெண்கள் முன்னேற்றத்தில் வெளிப்படுகிறது

**சிக்கபளாப்பூர், ஜூலை 3:** இந்தியாவில் நிகழ்ந்துவரும் மாற்றத்தை பெண்களின் முன்னேற்றம் சுட்டிக்காட்டுகிறது என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம், சிக்கபளாப்பூர் மாவட்டம், முத்தேனஹள்ளியில் உள்ள ஸ்ரீசத்யசாய் மனித மேன்மைக்கான பல்கலைக்கழகத்தின் 2-ஆவது பட்டமளிப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவில் பங்கேற்று அவர் பேசியதாவது:

நிகழாண்டுக்கான குடிமைப் பணிகள் தேர்வில் முதல் நான்கு இடங்களை பெண்கள் கைப்பற்றியுள்ளனர்.

சமவாய்ப்பு வழங்கப்படும்போது, ஆண்களைவிட பெண்கள் சிறப்பாக சாதிக்க முடியும் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தியாவில் நிகழ்ந்துவரும் மாற்றம், நமது நாட்டின் பொன்னான எதிர்காலத்தை பெண்களின் முன்னேற்றம் வெளிப்படுத்துகிறது. இது வெறும் முன்னோட்டம்தான்.

**குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு**



கர்நாடக மாநிலம் ஸ்ரீசத்யசாய் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு சான்றிதழ் வழங்கிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு.

இனிமேல்தான் பெண்கள் முன்னேற்றம் முழுமையாக வெளிவரும். ஸ்ரீசத்தியசாய் மனித மேன்மைக்கான பல்கலைக்கழகத்தில் படித்துவரும் மாணவர்களின் எண்ணிக்கையில் 66 சதவீதம் பேர் பெண்கள் ஆவர். தங்கப்பதக்கம் பெற்ற 17 மாணவர்களில் 11 பேர் பெண்கள். நான் இதற்கு முன்னர் ஜார்க்கண்ட் மாநில ஆளுநராகவும், தற்போது குடியரசுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பல்வேறு கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழாக்களில் பங்கேற்று வருகிறேன்.

பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் பெண்கள் அதிக அளவில் வெற்றி பெற்றுவருவதைக் காண முடிகிறது. இப்பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களில் 50 சதவீதம் பேர் என்னைப் போல குடும்பத்தின் முதல் பட்டதாரிகள் என்பது பெருமிதமாக உள்ளது என்றார்.

# இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



**ஜகார்த்தா, ஜூலை 3:** இந்தோனேசியாவின் பப்புவா மாகாணத்தில் திங்கள்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 5.4 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது. இருப்பினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

பப்புவா தலைநகர் ஜெயபுராவில் உள்ள அபேபுரா மாவட்டத்திலிருந்து 135 கி.மீ. தொலைவில் 13 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கத்தின் மையம் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அபாயம் எதுவும் இல்லை என இந்தோனேசிய வானிலை, கால நிலை, புவி இயற்பியல் நிறுவனம் தெரிவித்தது. இருப்பினும், நிலநடுக்கத்துக்குப் பிந்தைய அதிர்வுகள் இருக்கக்கூடும் என அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பப்புவா மாகாணத்தில் 10 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இந்தோனேசியாவின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாகாணங்களில் பப்புவாவும் ஒன்று.

இந்தோனேசியாவில் நிலஅதிர்வுகள், எரிமலை வெடிப்புகள், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன. கடந்த நவம்பரில் மேற்கு ஜாவா மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் (5.6 அலகுகள்) 602 பேர் உயிரிழந்தனர். 2021, ஜனவரியில் மேற்கு சுலாவெசி மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் (6.2 அலகுகள்) 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும் 'நெருப்பு வளையம்' என்றழைக்கப்படும் பகுதியில் இந்தோனேசியா அமைந்துள்ளதால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. அங்கு கடந்த 2004-ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி உருவாகி இந்தியா உள்ளிட்ட ஏராளமான நாடுகளில் சுமார் 2.30 லட்சம் பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது.